பக்கங்கள் 14

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆடி 18 வியாழக்கிழமை 03.08.2023 அதிர்வு 03

## கோண்டாவிலில் கடையில் தீ!



யாழ்ப்பாணம் கோண் டாவில் பகுதியில் உள்ள கடையொன்றில் இன்று வியாழக்கிழமை 05

## மலையக எழுச்சிப் பேரணிக்கு யாழிலிருந்து ஆதரவு ஊர்வலம்!





-எஸ்.நிதர்ஷன்-

'வேர்களை மீட்டு உரிமை களை வென்றிட' எனும் தொனிப் பொருளில் மாண்புமிகு மலை யக எழுச்சி பேரணி இன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகி யது.

தலைமன்னார் முதல் 04

## கிளிநொச்சியிலும் ஆதரவுப் பேரணி



மாண்புமிகு மலையக மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இடம் பெற்றுவரும் தலைமன்னார் முதல் மாத்தளை வரையிலான மலையக எழுச்சிப் 05

# ரணிலுக்கு கூட்டமைப்பு வெள்ளையடிக்கின்றது!

## கஜேந்திரகுமார் காட்டம்



- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம், ஓகஸ்ட்02

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு முண்டு கொடுத்து வெள்ளையடிக்கும் வேலையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் நீதியரசர் விக்கி னேஸ்வரனும் செய்து வருகின்றனர் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றஞ்சாட்டியுள்ளார்.** 04

## குமார வெல்கம மீது மத்துகமவில் தாக்குதல்



முன்னாள் அமைச்சரும் களுத்துறை மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான குமார வெல்கம மீது தாக்குதல் மேற் கொள்ளப்பட்டுள்ளது. 05

## கடலட்டைக் குஞ்சுகளுடன் மன்னாரில் இருவர் கைது!



மன்னாரில் இருந்து அனு மதிப்பத்திரம் இன்றிக் கடலட்டைக் குஞ்சு களை கொண்டு 05

## மீற்றர் பொருத்தாத ஓட்டோக்கள் மீது யாழ். நகரத்தில் பொலிஸார் பாய்ச்சல்

யாழ் நகரப் பகுதி ஓட்டோத் தரிப்பிடத்தில் இருந்து மீற்றர் பொருத்தாத ஓட்டோக்களை அகற்றும் நடவடிக்கையை யாழ்ப்பாணம் போக்குவரத்து பொலிஸார் இன்று வியாழக் கிழமை காலை முதல் முன்னெடுத்தனர்.

யாழ் மாவட்டத்தில் வாட கைக்கு செலுத்தும் ஓட்டோக்க ளுக்கு மீற்றர் பொருத்தாமையி னால் ஓட்டோக்களுக்கான 05



## கிளாலியில் கடற்படையினர் சுட்டதில் ஒருவர் காயமுற்றார்!

பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிளாலி கடற்கரையில் சட்டவிரோத மணல் ஏற்றியவர்கள் என்று கூறப்படுவோர் மீது நேற்று புதன்கிழமை இரவு கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

பளைப் பகுதியைச் சேர்ந்த கஜேந்திரன் பிரணவன் என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## பொறுமையாக இருங்கள் விரைவில் மாற்றம் வரும்!

### தீர்வு குறித்து சம்பந்தன் நம்பிக்கை



கொழும்பு,ஓகஸ்ட்03

தமிழ் மக்களுக்கு நான் சொல்லக் கூடியது எல்லாம் "பொறுமையாக இருங் கள் – அரசியல் தீர்வு விவகாரத்தில் மாற்றம் ஏற்படும்" என்பதுதான் என இலங்கைத் தமி ழரசுக் கட்சியின் நாடாளுமன்ற 04

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# சவேந்திர சில்வாவைத் தடை செய்வது தொடர்பில் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சுக்கு அழுத்தம்

## கொடுக்கப்படும் என்கிறார் பென்னி மோர்டான்ட் எம்.பி.




**சவேந்திர சில்வாவை தடை செய்வது தொடர்பில் பிரித்தானியா நாடாளுமன்ற உறுப்பினர் பென்னி மோர்டான்ட் உடனான சந்திப்பில் பகிரப்பட்ட விடயங்களது தொகுப்பு**

அமெரிக்கா, கனடா பயணத்தடை விதித்துள்ளது போன்று அமெரிக்கா, கனடாவின் வழியை பின்பற்றி பிரித்தானியாவும் இலங்கை இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவைவுக்குத் தடை விதிக்கவேண்டும். இது தொடர்பில் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சுக்கு அழுத்தம் கொடுக்கப்படும் என்று அந்த நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் பென்னி மோர்டான்ட் தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா உள்ளிட்ட யுத்தகுற்றவாளிகளை பிரித்தானியாவின் உலகளாவிய மனித உரிமைகள் தொடர்பான தடைவிதிப்பு அதிகார சபையின் கீழ் (Global Human Rights Sanction Regime) தடைசெய்வதற்கு பிரித்தானிய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தி, பிரித்தானியாவின் போட்ஸ்மவுத் வடக்கு (Portsmouth North) பகுதி நாடாளுமன்ற உறுப்பினரும் ஹவுஸ் ஒவ்ப் காமன்ஸ் தலைவருமான பென்னி மோர்டான்ட் எம்.பியுடன் சந்திப்பு ஒன்று இணைய வழியாக இடம்பெற்றுள்ளது.

இதில் சட்ட ஆலோசகரும் மனித உரிமைச் செயற்பாட்டாளருமான கீத் குலசேகரம்` தலைமையில் இடம்பெற்ற இந்த முக்கிய சந்திப்பில், The Sri Lanka Campaign for Peace and Justice (SLC) அமைப்பின் பிரச்சாரப் பணிப்பாளர் பென்ஜமின் குமார் மொறிஸ், பழமைமைவாதக் கட்சிக்காகான தமிழர்கள் அமைப்பின் (British Tamil Conservatives – BTC) தலைவரும், கவுண்சிலருமான ஜெய் கணேஸ், மற்றும் அந்த அமைப்பின் செயலாளர் கஜன் ராஞ், இனப்படுகொலையை தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமாக சர்வதேச மையத்தின் (ICP-PG) சார்பில் றோய் ஐக்ஷான் ஆகியோர் சிறப்பு பேச்சாளர்களாக கலந்து கொண்டனர்.

அத்துடன் இனப்படுகொலையின் நேரடி சாட்சியங்கள் மற்றும் சித்திர வதையால் பாதிக்கப்பட்டவர்களான தோமஸ் அம்புரோஸ் இளங்கோ பீரிஸ், சதேந்லொயிற்றன் புயலேந்திரன், ஸ்ரீஅபிராமி ஸ்ரீபாலேஸ்வரன் மற்றும் கனகசபாபதி கார்த்திகேசன் ஆகியோரும் கலந்து கொண்டு, தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின் முடிவில் நாடாளுமன்ற உறுப்பினர் பென்னி மோர்டான்ட் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் வருமாறு–

இதில் கீத் குலசேகரம் தனது தலைமை உரையின் போது–



இலங்கையில் இடம்பெறும் இனப்படுகொலைக்கு வரலாற்று ரீதியாக பிரித்தானியாவே பொறுப்பு. தமிழ் மக்களுக்கு நீதி வழங்க வேண்டிய கடமைப்பாடு பிரித்தானியாவுக்கு உள்ளது. ITJP மற்றும் ICPPG ஆகிய அமைப்புக்கள் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சுக்கு (FCDO) போதுமான ஆதாரங்களை சமர்பித்த போதும் இன்னும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற யுத்த குற்றங்கள் மட்டுமன்றி, தற்போது இலங்கையில் தொடரும் ஆள்கடத்தல் மற்றும் சித்திர வதைகளும் சவேந்திர சில்வாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஆயுத படைகளே மேற்கொண்டுவருகின்றன. அதற்கும் சவேந்திர சில்வாவே பொறுப்பு. சந்திப்பில் கலந்துகொண்ட சித்திர வதைக்குள்ளானவர்கள் இதற்கு நேரடிக் சாட்சி.

சவேந்திர சில்வா யுத்தகுற்றங்களில் ஈடுபட்டிருப்பதை ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்மீது ஏற்கனவே அமெரிக்கா, கனடா பயணத்தடை விதித்துள்ளன. அமெரிக்கா, கனடாவின் வழியை பின்பற்றி பிரித்தானியாவும் தடை விதிக்கவேண்டும். இது தொடர்பில் பிரித்தானிய புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.– என்று தெரிவித்தார்.

அடுத்து உரையாற்றிய பெஞ்ஜமின் குமார் மொறிஸ்–

சவேந்திர சில்வா இழைத்த யுத்தக் குற்றங்களையும் அதற்கான ஆதாரங்களையும் விபரமாக எடுத்து விளக்கினார்.

தொடர்ந்து பேசிய கஜன்ராஜ் –

இலங்கை இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவினை தடைசெய்வதற்கு இதுவரை 50 இற்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனுப்பிய கோரிக்கைகளுக்குச் சரியான பதிலை FCDO தராதது வருத்தம் அளிக்கிறது.

தற்போதைய பிரித்தானிய அரசு இலங்கைக்கு எதிராகத் தடை விதிக்கத் தயக்கம் காண்பிப்பது மிகவும் ஏமாற்றம் தருகிறது. இலங்கை யுத்தக் குற்றவாளிகளைத் தடைசெய்வது தொடர்பில் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினரான பொப் பிளக்மன் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் குழுவை தாங்கள் உருவாக்கியுள்ளார் . அதனில் இணைந்து செயற்படுங்கள். – என்றார்.

அதனையடுத்து உரையாற்றிய ஜெய் கணேஸ் –

மேற்படி பேச்சாளர்கள் குறிப்பிட்ட விடயங்களை மீளவும் வலியுறுத்தியதுடன், பிரித்தானிய பழமைவாத கட்சி ஆட்சியில் உள்ளபோது தமிழர்களுக்கு நியாயம் வழங்க ஆவன செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அனைவரின் கருத்துக்களையும் உள்வாங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் பென்னி மோர்டான்ட் தனது சந்தேகங்களை கேட்டார்.


ஈழத் தமிழர்களின் கோரிக்கையையும் ஆதங்கத்தையும், தனது பகுதியில் வாழும் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் தான் பிரித்தானிய அரசுக்கு எடுத்துரைப்பார் என்று தெரிவித்தார்.

குஊனுமு இதுவரை நடவடிக்கை எடுக்காமைக்கான காரணத்தைக் கேட்டுக் கடிதம் அனுப்புவார் என்றும் தெரிவித்துள்ளார்.

கீத் குலசேகரம் கேட்டுக்கொண்டபடி தமிழருக்கான அனைத்துக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் குழு மற்றும் மக்நெட்ஸ்கை தடைகளுக்கான அனைத்துக்கட்சி நாடாளுமன்ற குழுக்களில் இணையவும், FCDO வுக்குத் தமிழ் மக்கள் சார்பில் இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவைத் தடைசெய்யக் கோரி தன்னாலான வகையில் அழுத்தம் கொடுப்பார் என்றும் பென்னி மோர்டான்ட் தெரிவித்துள்ளார்.

# லிந்துலை மலை உச்சியிலிருந்த பெண்ணின் சடலம் நேற்று மீட்பு

## மீட்புப் பணியாளர்களில் ஒருவரான இராணுவச் சிப்பாய் மாரடைப்பால் சாவு



லிந்துலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிறேட் வெஸ்டன் கல்கந்தை மலை உச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட இனந்தெரியாத பெண்ணின் சடலம் இராணுவத்தின் உதவியுடன் நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் இந்தச் சடலத்தை மீட்கும் பணிக்கு மலை உச்சிக்குச் சென்ற இராணுவச் சிப்பாய் ஒருவருக்கு ஏற்பட்ட மாரடைப்பு காரணமாக அவர் வழியிலேயே உயிரிழந்துள்ளார்.

மேலும், சடலமாக மீட்கப்பட்ட பெண் மற்றும் இராணுவச் சிப்பாயின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டன.

அடையாளம் தெரியாத பெண்ணின் சடலம் ஒன்று கல்கந்தை மலை உச்சி சரிவு பகுதியில் காணப்பட்டமை தொடர்பில் லிந்துலை மற்றும் தலவாக்கலை பொலிஸாருக்கு நேற்றுமுன்தினம் மாலை தகவல் கிடைத்தது.

அதற்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று பெண்ணின் சடலத்தைக் கண்டுபிடித்ததாக லிந்துலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிசிர தெரிவித்தார்.

மேலும் சம்பவம் தொடர்பில் நுவரெலியா நீதிமன்றத்துக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது. அதேநேரத்தில் சம்பவ இடத்துக்கு மரண விசாரணை செய்வதற்கான நேரம் போதாத நிலையில் நீதிவான் நேற்று முற்பகல் சம்பவ இடத்துக்குச் சென்றிருந்தார்.

இவருடன் பொலிஸார், இராணுவத்தினர் எனப் பலர் சென்றிருந்தனர். அதன்பின் சடலம் மீட்கப்பட்டு சம்பவ இடத்தில் நீதிவான் விசாரணையின் பின் சடலம் சட்ட பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப் பணிக்கப்பட்டது.

அத்துடன் மலை உச்சிப் பகுதிக்கு நடந்து சென்ற வேளையில் இராணுவச் சிப்பாய் ஒருவருக்கு ஏற்பட்ட மாரடைப்பால் அவர் வழியில் உயிரிழந்தார். இராணுவச் சிப்பாயின் சடலத்தையும், இராணுத்தால் மீட்கப்பட்ட பெண்ணின் சடலத்தையும் அரும்பாடுபட்டு சுமந்து கொண்டு மலையடிவாரத்தில் மீட்புப் பணியாளர்கள் வந்தனர்.

மேலும், இந்தச் சம்பவத்தில் சடலமாக மீட்கப்பட்ட பெண் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்தமையும் குறிப்பிடத்தக்கது.

# உறுதியான உத்தரவாதம் இல்லையேல் மீண்டும் கட்சிக்காகப் பாடுபட முடியாது

## ஐ.தே.க. சிரேஷ்ட ஆதரவாளர்கள் ஆதங்கம்

(அ.அஸ்வர்)

ஐக்கிய தேசியக் கட்சி தலைமைத்துவத்தின் உறுதியான உத்தரவாதம் இன்றேல் மீண்டும் அதற்காகப் பாடுபடுவதில் எந்த அர்த்தமும் கிடையாது என்று அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச ஐ.தே.க. சிரேஷ்ட ஆதரவாளர்கள் ஆதங்கப்படுகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாடுகளை விஸ்தரிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் அதன் சிரேஷ்ட ஆதரவாளர்கள் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு கூறினர்.

இதுபற்றி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

தேர்தல்கள் வரும்போதெல்லாம் ஓடோடிவந்து கட்சி நடவடிக்கைகளையும் ஆதரவாளர்களையும் உற்சாகப்படுத்தும் ஐக்கிய தேசியக் கட்சி தலைமைத்துவம் தேர்தல் முடிந்த கையோடு அனைத்தையும் மறந்து விடுகிறது.

இங்குள்ள மாற்று அரசியல் அணிகளுடன் இணைந்து அதன் ஆதரவாளர்களை தாரைவார்க்கும் நடவடிக்கைகளையே தொடர்ந்தும் செய்து வருகிறது. இதனால் அக்கட்சியையே நம்பியிருந்த ஆதரவாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் விரக்தி நிலையையும் அடைந்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் செல்வாக்கையும் நன்மதிப்பையும் நிலைக்கச் செய்வதற்கு மிகச் சாதுரியமான வழிமுறைகளைக் கையாண்டு இந்தப் பகுதியில் கட்சியினை மீளக் கட்டியெழுப்புவதற்கு உழைத்த மயோன் முஸ்தபா போன்ற செல்வாக்குள்ள அரசியல் பிரமுகர்களை முறையாகப் பயன்படுத்தத் தவறியதன் பிரதிபலன் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களில் கட்சி மிகப் பெரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது.

இந்த நிலையில் மீண்டும் மயோன் முஸ்தபா போன்றவர்களை கட்சிக்குள் உள்வாங்குவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் பாராட்டப்பட வேண்டியதுதான்.

ஆயினும் காரியம் முடிந்தபின் கைகழுவும் நிலை தோன்றாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இதுவரை வழங்கப்படவில்லை. மீண்டும் இங்கு கட்சியை பலப்படுத்த வேண்டுமாயின் கட்சியின் ஆதரவாளர்கள் உட்பட அதன் பிரமுகர்கள் அனைவரும் திருப்திப்படும் வகையில் உறுதியான உத்தரவாதங்கள் கட்சித் தலைமைப்பீடத்தால் வழங்கவேண்டும்.

இது தொடர்பாக கட்சியில் இணைய விரும்புகின்ற அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து பிரமுகர்களும் ஒரு முறையான வேலைத்திட்டத்தினை உடனடியாக உருவாக்க முயற்சிக்க வேண்டும். இல்லையேல் மீண்டும் தாம் ஏமாறுவதற்கு தயாரில்லை. – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

## ரணிலுக்கு...

யாழ்ப்பாணம் கொக்குவிலில் உள்ள தமது கட்சி அலுவலகத்தில் இன்று மதியம் தாம் நடத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவது சம்பந்தமாக இரண்டு சுற்றுப் பேச்சுகள் முடிவடைந்திருக்கின்ற நிலையில் ஜனாதிபதி அலுவலகத்திலிருந்து மூன்றாவது சுற்றுப் பேச்சுக்காக எமக்கு மீண்டும் அழைப்பு வந்துள்ளது.

அந்த விடயத்தில் நாங்கள் ஏற்கனவே குறிப்பிட்டமை போல தமிழ் மக்களின் அரசியல் தீர்வு சம்பந்தமான பேச்சு என்று சர்வதேச மட்டத்தில் காட்டிக் கொண்டு, அதேநேரம் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு எந்தவித தொடர்பும் இல்லாத ஒற்றையாட்சிக்குள் இருக்கக் கூடிய ஒரு கட்டமைப்பு அடிப்படையில் அரசமைப்பில் இருக்கின்ற 13 ஆவது திருத்தம் தொடர்பாகப் பேச அழைத்துள்ளனர்.

இது மீண்டும் மீண்டும் வடகிழக்கு வாழ் ஈழத் தமிழர்களை முட்டாளாக்கு கின்ற வேலை மட்டுமல்ல, அது எந்தளவு தூரத்திற்கு ஈழத்தமிழர்களை ரணில் விக்கிரமசிங்க மதிக்கத் தயரில்லை அல்லது கணக்கெடுக்கத் தயாரில்லை என்பதையும் காட்டுகின்ற ஒரு செயலாகத்தான் இருக்கின்றது.

ஏற்கனவே குறிப்பிட்டமை போல – 'குட்டக் குட்டக் குனிபவனும் மடையன், குனியக் குனியக் குட்டுபவனும் மடையன்' என்பது போல – இதைத் தெரிந்து கொண்டு பேச்சுக்களில் கலந்து கொள்கின்ற தமிழ்த் தரப்புகள் எந்தளவு தூரத்திற்கு தமிழ் மக்களுக்குப் பேரம் பேசக் கூடிய வாய்ப்புகளை முற்றிலும் இல்லாமல் ஆக்கி, ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்கு – அதுவும் சிங்கள மக்களே ஏற்றுக் கொள்ளாத அல்லது அங்கீகரிக்காத ஓர் ஆட்சிக்கு – முண்டு கொடுக்கின்ற ஒரு செயலாக மட்டும்தான் அது அமைகிறதென்பதை எமது மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இதில் முக்கியமாக ரணில் விக்கிரமசிங்கவின் உண்மையான – ஒரு மோசமான – முகத்தை வெளிக் கொண்டு வரக் கூடிய விடயம் இன்றைக்கு, இன்னும் இன்னும் அம்பலமாகியிருக்கின்றது.

ஒரு பக்கம் ஏதோ பெயரில் அதிகாரப் பகிர்வு என்றும், 13 ஆம் திருத்தத்தை அமுல்படுத்துவதாகச் சொல்லியும் தமிழ் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

அதே நேரம் இந்த அரசாங்கம் தீவகம் முழுவதையும் ஓர் அதிகார சபைக்குள்ளே கொண்டு வந்து அந்தத் தீவகத்தில் இருக்கக் கூடிய அனைத்து நிர்வாக வேலைப் பணிகளையும் கொழும்பால் நேரடியாக ஆட்சி செய்யப்படுகின்ற முறையில் ஒரு சட்ட வடிவமொன்று தயாரிக்கப்பட்டு, அது அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப் படகூடிய தயார் நிலையில் இருக்கின்றது.

இந்த வடிவம் தயாரிப்பது குறித்து ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்திற்குக் கடைசியாக வந்த போது ஒரு சில புத்திஜீவிகளை அழைத்து அங்கு பேசப்பட்டிருக்கின்றது. ஆகவே தீவகத்திற்கான அந்த அதிகாரக் கட்டமைப்பு என்பது மகாவலி அதிகார சபைத் திட்டத்தையும் விட மிக மோசமான வகையில் தமிழர்களின் தலைவிதியை முற்றிலும் மாற்றியமைக்கக் கூடிய வகையில் கொழும்பால் மட்டும் நிர்ணயிக்கின்ற ஒரு அதிகார சபையாகத்தான் அந்த உத்தேச வரைவுச் சட்டம் அமைந்திருக்கின்றது.

இது மிக மிக மோசமானது. ஆனால் தமிழ்த் தரப்புக்களுக்கு இது நன்றாகத் தெரியும். குறிப்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கே இந்த விடயம் தெரிய வருகிறதென்றால் இன்றைக்கு ரணில் விக்கிரமசிங்கவிற்கு முண்டு கொடுக்கிற இந்தத் தரப்புகளுக்கும் இது நன்றாகத் தெரியும்.

ஆனால் தங்களை ஏதோ தேசியவாதிகள் என்று காட்டிக்கொண்டு இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டுள்ள தமிழரசுக் கட்சி, புளொட், ரெலோ மற்றும் விக்கினேஸ்வரன் போன்ற தரப்புகளுக்கு இது நன்றாகத் தெரியும். அப்படித் தெரிந்து கொண்டுதான் படுமோசமான இந்தச் செயற்பாடுகளை மூடி மறைத்து ரணில் விக்கிரமசிங்கவிற்கு தமிழ் மக்கள் மட்டத்தில் வெள்ளையடித்து கொண்டிருக்கின்றனர்.

ஆட்சியாளர்கள் தீவக நிலப்பரப்பை மத்திக்குள் கொண்டு சென்று அதை நிரந்தரமாகக் கைப்பற்றினால் நாங்கள் தீவகத்தை இழக்க வேண்டிய நிலைமை உருவாகும் எனத் தெரிந்து கொண்டு இந்தத் தரப்பினர் ஆட்சியாளர்களுக்குத் துணை போகின்றனர்.

ஏற்கனவே தீவகத்தில் மக்களுடைய வாழ்க்கையை நடாத்த முடியாத அளவிற்கு நிலைமைகளை உருவாக்கியமையால் மக்கள் படிப்படியாக வெளியேறிய நிலைமைதான் அங்கு இருக்கின்றது. இந்தச் சந்தரப்பத்தைப் பயன்படுத்தி அந்தச் சனத்தொகையை முற்றிலும் இல்லாமல் செய்து, சுற்றுலா போன்ற விடயங்களைக் காட்டி, அங்கு சிங்கள மயமாக்குகின்ற வேலைத் திட்டம்தான் இதற்குப் பின்னால் இருக்கின்றது.

தீவக நிலப்பரப்புகள் முழுக்க முழுக்க கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்கள். ஏனென்றால் இந்தியாவிற்கும் ஏனைய நாடுகளுக்கும் முக்கியமான வையாக இருக்கக்க கூடிய பிரதேசங்கள். அது முற்று முழுதாக சிங்களத் தரப்பிடம் தான் இருக்க வேண்டும், அது தமிழர் கையில் இருக் கூடாது என்பதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்பதில் எந்தவித சந்தேகமும் இருக்க முடியாது.

இந்த பின்னனியில்தான் ஒன்றுமே இல்லாத 13 ஆம் திருத்தம் குறித்து இவர்கள் பேசி வருகின்றனர். அவ்வாறு 13 ஆம் திருத்தத்திற்குள் பேச்சுவார்த்தையை முடக்கி, தமிழ் மக்களுக்கு ஏதோ கொடுக்கப் போவதாக பொய்யைக் காட்டி, ஆனால் உண்மையில் நடக்கின்ற விடயம் இந்த அரசாங்கத்திற்கு வெள்ளையடித்து, அதேநேரம் அரசாங்கம் சிங்கள மயமாக்குகின்ற வேலைகளுக்கு அத்திபாரம் போடுகின்ற செயற்பாடுகளுக்குத் துணை போகிற நிலைமைதான் நடக்கிறது.

இந்த இடத்தில் வடக்கு – கிழக்கு தமிழர் தயாகத்தில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை மறுதலிக்கும் வகையில் எடுக்கப்படுகிற எந்தவொரு திட்டத்தையும் நாங்கள் ஒருபோதும் ஆதரிக்கப் போவதில்லை. முற்றுமுழுதாக நாங்கள் எதிர்ப்போம். அதற்கு எதிராக எங்கள் மக்களையும் அணிதிரட்டுவோம். அது மட்டுமில்லாமல் இந்தச் செயற்பாடுகளுக்கு துணை போகின்ற தரப்புகளுக்கு எதிராகவும் நாங்கள் எங்கள் மக்கள் பார்வையைத் திருப்புவோம் என்பதையும் கூறிக் கொள்கிறோம் . – எனறார்.

## பொறுமையாக...

குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்திருக்கின்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமது இந்தியப் பயணத்தின் பின்னர் நடத்திய சர்வகட்சி கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்களின் அடிப்படையிலும், அரசியல் தீர்வு விவகாரத்தில் ஏற்பட்டுள்ள தேக்க நிலைமை தொடர்பிலும், அதில் மாற்றம் தேவை என்ற அடிப்படையில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் வெளிவிவகார செயலாளர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் ஆகியோருக்குத் தான் எழுதிய கடிதம் தொடர்பில் கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இந்தக் கடிதம் நேற்று அவர்களிடம் சேர்க்கப்பட்டுள்ளதாக இந்திய தூதரக அதிகாரிகள் தன்னிடம் உறுதிப்படுத்தினர் என சம்பந்தன் கூறியுள்ளார்.

அதன் பின்னர் இத்தகைய நம்பிக்கை வெளிப்படுத்தும் கருத்து ஒன்றை தமக்கு நெருக்கமான நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரிடமும் சம்பந்தன் வெளிப்படுத்தினார் என அறிய வந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

இந்தச் சந்திப்பின்போதே இரா. சம்பந்தனால் இந்திய தூதரிடம் இக் கடிதம் கையளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

"அரசியல் தீர்வு விவகாரத்தில் ஸ்தம்பித நிலை ஏற்பட்டுள்ளது. இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 36 ஆண்டுகள் கடந்துள்ளது. அதில் உள்ள 13 ஆவது திருத்தம் அதிமுக்கியத்துவம் வாய்ந்தது.

இந்திய – இலங்கை ஒப்பந்தமும் முழுமையாக நடைமுறைப்படுத் தப்படவில்லை. அதேவேளை 13ஆவது திருத்தத்தில் உள்ள பரிந்துரைகளும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை.

அரசியல் தீர்வு ஸ்தம்பிதம் அடைந்துள்ள நிலையில், அதில் கட்டாயம் மாற்றம் தேவை என வலியுறுத்தி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதியுள்ளேன். இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருக்கும் பிரதியிட்டுள்ளேன்" – என்றார்.

## மலையக...

மாத்தளை வரை ஆரம்பிக்கப்பட்டுள்ள பேரணிக்கு வலுச்சேர்க்கும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா வரை இப் பேரணி செல்லவுள்ளது.

யாழ் மத்திய பஸ் நிலையம் முன்பாக இன்று காலை ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து பேரணியாக யாழ்நகரிலிருந்து வவுனியா நோக்கி அது புறப்பட்டுச் சென்றது.

இதன் போது மதத்தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

NORTH WALL
ENGINEERING

யாழ் மண்ணில்
அனைத்து
கட்டுமான
தேவைக்கும்!!!
சேவைக்கும்!!!

நோர்த் வோல்
என்ஜினியரிங்

Nelliady, Karaveddy
Jaffna.
0777818208
0774002766

# அம்பலாந்தோட்டையில் நில அதிர்வு!

அம்பலாந்தோட்டை பெரகம மஹஆர பிரதேசத்தில் நில அதிர்வு ஏற்பட்டதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று இரவு 7.20 மணியளவில் நில அதிர்வு ஏற்பட்டதாக பிரதேச மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

“திடீரென வீட்டின் உள்பகுதி பலத்த சத்தத்துடன் குலுங்கியது. வீட்டில் இருந்த சில ஓடுகள் தூக்கி வீசப்பட்டன” என்று அந்தப் பகுதியை சேர்ந்த பெண் ஒருவர் கூறினார்.

அருகில் உள்ள பல வீடுகளிலும் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இது மிகக் குறுகிய நேரமே இருந்தது என்றும் மக்கள் தெரிவித்தனர்.

நிலநடுக்கம் தொடர்பில் இதுவரை எவ்வித தகவல்களும் கிடைக்கப்பெறவில்லை என்று ஹம்பாந்தோட்டை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

## கிளிநொச்சியில்...

பயணத்துக்கு ஆதரவு சேர்க்கும் வகையில் நேற்று புதுக்குடியிருப்பில் ஆரம்பமான பேரணி இன்று இரண்டாம் நாளாக காலை 9 மணிக்கு கிளிநொச்சி டிப்போ சந்தியில் இருந்து நடைபயணத்தை ஆரம்பித்துள்ளது.

மலையகம் 200ஐ முன்னிட்டு ‘வேர்களை மீட்டு உரிமை வென்றிட’ எனும் தொனிப்பொருளிலான மலையக எழுச்சி நடை பவனிக்கு ஆதரவு தெரிவித்து,

நேற்று புதன்கிழமை முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் ஆரம்பமான நடைபயணம், இன்று கிளிநொச்சியிலிருந்து வவுனியா நோக்கிப் புறப்படுகிறது.

இதனையடுத்து, நாளை வெள்ளிக்கிழமை வவுனியாவில் ஆரம்பமாகும் மாண்புமிகு மலையக மக்கள் பேரணியின் நடைபயணத்தில் அது இணைந்துகொள்ளவுள்ளது.

இந்த நடைபவனிக்கு ‘சிறகுகள்’ அமைப்பினர், நவஜீவானம், மகாசக்தி, செல்வநாயகம் நினைவு அறக் கட்டளை, ஒப்பர் சிலோன், கிளிநொச்சி வர்த்தக சங்கம், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், அருட்தந்தையர்கள், ‘விழுதுகள்’ அமைப்பினர், சமூக செயற்பாட்டாளர்கள், பெண்கள் வாழ்வுரிமைச் சங்கத்தினர், மலையக மக்களின் உரிமைகள் தொடர்பில் ஆர்வம் கொண்ட பல்வேறு தரப்பினர், பொதுமக்கள் என பெருமளவினர் ஆதரவு வழங்கினர்.

## குஞ்சுக் கடலட்டைகளுடன்...

சென்ற இருவர் இன்று வியாழக்கிழமை காலை மன்னார் பிரதான பாலத்தடியில் உள்ள சோதனை சாவடியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து சுமார் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குஞ்சுக் கடலட்டைகள் உயிருடன் மீடகப்பட்டுள்ளன.

இந்தச் சோதனைச் சாவடியில் வைத்து இராணுவத்தினரால் அவர்கள் பயணித்த வாகனம் சோதனைக்குட்படுத்தப்பட்ட போது கடலட்டைகள் அனுமதிப்பத்திரம் இன்றி கொண்டு செல்லப்பட்டமை தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட பல்லவராயன் கட்டுப்பகுதியைச் சேர்ந்த இரு சந்தேக நபர்களும் அவர்களிடம் இருந்து மீட்கப்பட்ட கடலட்டைகளும் மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## மீற்றர்...

கட்டணங்கள் அதிகளவில் வசூலிக்கப்படுகின்றன எனப் பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் யாழ் மாவட்டத்தில் ஓகஸ்ட் முதலாம் திகதியிலிருந்து மீற்றர் பொருத்தாத ஓட்டோக்கள் சேவையில் ஈடுபட அனுமதிக்கப்பட மாட்டாது என யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## கோண்டாவில்...

நண்பகல் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அவ்விடத்திற்கு சென்ற யாழ் மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினர் தீப்பரவலை கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர்.

## குமார வெல்கம...

இன்று காலை மத்துகம நகரில் வைத்து சிலர் தாக்குதல் நடத்தியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மத்துகம நகரிலுள்ள கடையொன்றில் ஏற்பட்ட வாக்குவாதத்தின் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் தாக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலுக்கு உள்ளான குமார வெல்கம சிகிச்சைக்காக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளமையுடன் தாக்கியவர் பொலிஸாராரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மறு மதிப்பீடு அவசியம்தான்!

இலங்கை விடயத்தில் - குறிப்பாக ஈழத் தமிழர்கள் விவகாரத்தில் - இந்தியாவின் போக்கு மற்றும் செயற்பாடுகள் குறித்து நியாயமான சில கேள்விகளை எழுப்பியிருக்கின்றார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாகக் கொண்டு வரப்பட்ட 13 ஆவது திருத்தம் இத்தனை ஆண்டுகளாக முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதையும் சரி, இணைக்கப்பட்டிருந்த வடக்கு - கிழக்கு பிரிக்கப்பட்ட போதும் சரி, அதில் மாகாணங்களுக்கு இருக்கின்ற அதிகாரங்களை இலங்கை அரசு பறித்த போதும் சரி, இந்தியா பார்த்துக் கொண்டுதானே இருந்தது? - என்று கேள்வி எழுப்பும் மனோ கணேசன், 13 ஆவது திருத்தம் தொடர்பில் வழமையாக இந்தியா சொல்லி வருகின்ற வார்த்தைப் பிரயோகத்தின் அடிப்படையிலான அழுத்தத்தைத்தான் இந்தியாவுக்கு விஜயம் செய்த இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்தியப் பிரதமர் இந்த முறையும் கூறியிருக்கின்றார் என்பதையும் சுட்டினார்.

சமீப காலத்திலே - நான்கு, ஐந்து வருடங்களாக - மாகாண சபைத் தேர்தல் கூட நடைபெறவில்லை. அதையும் இந்தியா பார்த்துக் கொண்டுதானே இருக்கின்றது என்று விசனத்துடன் கேட்கின்றார் அவர்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை வர்த்தமானி பிரகடனத்தின் மூலமாக இலங்கை அரசு பறித்து எடுத்துக் கொண்டுள்ளது. அது சட்டப்படி தவறும் கூட. அதையும் பார்த்து வாளாவிருக்கின்றது இந்தியா.

ஆனால் 13 திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துங்கள், மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள் என்று 'பழைய கீறல் விழுந்த றெக்கோட்' மாதிரி வழமையாகப் பாடுகின்ற பழைய பல்லவியைத்தான் இந்தியத் தரப்பு தொடர்ந்தும் பாடுகின்றது என்கிறார் மனோ கணேசன்.

இந்தப் பின்புலத்தில், ஈழத் தமிழர் விவகாரத்தில் இந்தியா எதுவரை வரும், எதுவரை சொல்லும் என்பதை தமிழ அரசியல் தலைவர்கள் அறிந்து, புரிந்து கொள்ள வேண்டும் என்று அவர் குறிப்பிடுவதில் விவகாரம் உண்டு.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் - 1983இல் - ஆடிக் கலவரம் நிகழ்ந்த காலச் சூழலில் கட்டவிழ்ந்த உலக ஒழுங்குமுறை வேறு. இப்போதுள்ள நிலைமையில் சர்வதேச உறவுகள், ஊடாட்டங்கள் தொடர்பில் கள யதார்த்தம் வேறு.

இந்தியாவின் சுய தேவைகள், கருத்துக்கள், அணுகுமுறைகள், கட்டாயங்கள், சர்வதேச உறவுகள், அவற்றின் அடிப்படையிலான கடப்பாடுகள் போன்றவை இப்போது பெருமளவில் மாறிவிட்டன.

எண்பதுகளில் தனது படைகளை நேரடியாக இலங்கை மண்ணுக்குள் அனுப்பி ஆதிக்கம் செலுத்திய இந்தியாவின் மேலாண்மை இன்றும் சாத்தியமானதா என்ற கேள்வியும் உண்டு.

தென்னிந்திய - தமிழக - மக்களின் தொப்புள் கொடி உறவு போன்ற ஈழத் தமிழர்கள் இலங்கையின் வடக்கு, கிழக்கைத் தமது பூர்வீகமாகக் கொண்டு வாழ்கின்றார்கள் என்ற யதார்த்தப் புறச் சூழலைத் தவிர, இவ்விடயத்தில் மற்ற எல்லா அம்சங்களும் மாறித்தான் விட்டன.

மனோ கணேசன் கூறுவது போல இந்த உண்மைகளை மறுமதிப்பீடு செய்து கொண்டுதான் - அவற்றின் அடிப்படையில்தான் - இந்தியத் தரப்புடனான தமது அணுகுமுறைப் போக்கைச் சீரமைத்து மாற்றிக் கொள்ள வேண்டும் நம் தமிழ்த் தலைவர்கள்.

# வவுனியா இரட்டைக் கொலை: பிரதான சந்தேக நபர் கைது!

வவுனியா, ஓக.03

வவுனியா தோணிக்கல்லில் வீட்டுக்கு தீ வைத்து வாளால் வெட்டிய சம்பவத்தில் இருவர் மரணமடைந்த சம்பவத்துடன் தொடர்புடையதாக கருதப்படும் பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிசார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்ட ஐவரை கைது செய்த பொலிஸார் நீதிமன்ற உத்தரவைப் பெற்று நடத்திய விசாரணையின் பின்னர், கூமாங்குளத்தை சேர்ந்தவரும் சம்பவத்தில் மரணமடைந்த சுகந்தனின் நண்பராக இருந்து பெண் விவகாரத்தால் பின்னர் பிரிந்தவருமான ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபரை இன்று (03.08.2023) நீதவான் முன்னிலையில், குற்ற புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை விசாரணை பிரிவினர் மன்றுக்கு ஆஜர்படுத்தி பொலிஸ் விசாரணைக்குட்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# மலையக எழுச்சிப் பயணத்தில் இணைந்து வலுச்சேர்ப்போம்

## சிறகுகள் அமையம் அழைப்பு

மலையகம் 200 தொடர்பில் தலைமன்னார் முதல் மாத்தளை வரையிலான நடைபயணம் நடைபெற்று வருகின்றது.

இந்த நடைபயணத்துக்கு வலுச்சேர்க்கும் வகையிலான ஊடக அறிக்கையைச் சிறகுகள் அமையம் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு-

கடந்த மாதம் 28 ஆம் திகதி மன்னாரிலிருந்து மலையக எழுச்சிப் பயணம் ஆரம்பமானது. மலையக தமிழ் மக்களுக்கு ஆதரவாக உங்கள் கரங்களை கோர்க்கவும் சிறகுகள் அமையம் சார்பாக அனைவரையும் அழைக்கின்றோம். உங்கள் பங்களிப்பானது ஒரு சிறு தூரமாகவோ, ஒரு நாள் பயணமாகவோ அல்லது முழுப் பயணமாகவோ இருக்கலாம்.

இலங்கையின் பெருந்தோட்டங்களில் தொழில் புரிவதற்காக இந்தியாவில் இருந்து கூலிகளாக அழைத்து வரப்பட்டவர்களின் வலி நிறைந்த பாதையையும், அனுபவித்த சொல்லில் அடங்காத் துயரங்களையும் நினைவு கூற வேண்டியது தமிழ் இளைஞர்களாகிய எமது கடமையாகும்.

ஆதி இலட்சுமி போன்று மூழ்காத பல கப்பல்களில் இந்தியாவில் இருந்து அழைத்துவரப்பட்ட மக்கள், மன்னாரில் தரையிறக்கப்பட்டு அங்கிருந்த, தாகம், பட்டினி, நோய், தன் குடும்பம் பற்றிய கவலை, கடன் சுமை, என்பவற்றுடன் ஆபத்தான காடுகளும் மேடுகளும் தாண்டி, மாத்தளை வரை வெறும் கால்களுடன் நடை பயணமாகவே வந்தார்கள். நடை பயணத்தின்போது இழந்த உறவுகளும், உரிமைகளும் ஏராளம்!

அவர்கள் கடந்து சென்ற பாதை வழியே அவர்களுக்கான உரிமைகளையும் சமத்துவத்தையும் பெற்றுக்கொடுக்க வேண்டும். அவ்வாறு கிடைக்காவிடில், மலையக தமிழ் சமுதாயம் ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கப்படும் வரை அவர்களுக்கான கோரிக்கைகளை ஆதரிக்கும் வகையில் எமது குரலும் ஒலிக்க வேண்டும்.

இந்தப் பயணமானது தலைமன்னார் முதல் மாத்தளை வரை 200 வருடங்களுக்கு முன்னர் அழைத்துவரப்பட்ட மக்களின் வழித்தடங்களை தொடர்வதாகவும், வரலாற்றினை அடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்க்கும் பெரும் பயணமாக அமையும்.

இந்த பயணம் மலையக தமிழ் மக்கள் சமத்துவ பிரஜைகளாக நடத்தப்படுவதற்கும் அவர்களுக்கான உரிமைகளும் கோரிக்கைகளும் கிடைக்கவும் அவர்களின் வாழ்வியல் முன்னோக்கிய பாதையில் பயணிக்கவும் ஆணிவேராக அமையும். – என்றுள்ளது.

# மக்கள் விரோதச் செயற்பாடுகளை தொடர்ந்தும் செய்து வருகிறது அரசு

## பேரிடி விழும் நாள் வெகுதொலைவில் இல்லை என்கிறார் சஜித்

கொழும்பு, ஓக.03

“அரசு எப்போதும் மக்களுக்குச் சார்பான செயற்பாடுகளையன்றி மக்களுக்கு விரோதமான செயற்பாடுகளையே செய்து வருகின்றது. அதன் விளைவுகள் அரசுக்குப் பேரிடியாக விழும் நாள் வெகுதொலைவில் இல்லை” என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

விவசாயிகளுக்கான தண்ணீர் பிரச்சினை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போது இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

“குளிரூட்டி அறைகளில் இருந்து அரசு எடுக்கும் தன்னிச்சையான முடிவுகளால் பாரிய அனர்த்தம் ஏற்படுவதைத் தடுக்க முடியாதுபோகும்.

உரத்தடைக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச எடுத்த தன்னிச்சையான முடிவுகளை அரசு நினைவுகூர வேண்டும்.

நாடு மிக மோசமான நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இந்த வேளையில், நாடு முழுவதும் சோறு போடும் விவசாயிகளின் வாழ்வோடு விளையாடுவதால் ஏற்படும் விளைவுகளை அரசு மட்டுமல்லாது நாடு முழுதும் அனுபவிக்க நேரிடும்.

இது நாட்டின் விவசாயத்தை முடக்குவதற்கு எடுக்கும் அரசின் நுட்பமான



மற்றும் தந்திரமான முயற்சியா எனவும் சந்தேகிக்க வேண்டியுள்ளது.

விவசாயிகளை மேலும் ஏமாற்றாமல் அவர்களின் விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான தண்ணீரை அரசு திறந்துவிட வேண்டும் என வலியுறுத்துகின்றோம்.” – என்றார்.

# நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் கையளிப்பு

## நாளை வவுனியாவில்

வவுனியா, ஓக.03

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் ஏற்பாட்டில் வவுனியா மாவட்டத்தில் நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் பொது மக்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா காத்தார் சின்னக்குளத்திலும் 10 மணிக்கு எல்லப்பர் மருதங்குளத்திலும் 10.45 மணிக்கு வவுனியா நொச்சிக்குளத்திலும் இவை கையளிக்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நாடாளுமன்ற உறுப்பினர் கே.திலீபன், இராஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே, இராஜாங்க அமைச்சர் சனத் நிஸாந்த ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# லிட்ரோ எரிவாயுவின் விலையில் மாற்றம்

லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை நாளை (04) மாற்றியமைக்கப்பட உள்ளது.

திருத்தப்பட்ட விலைகள் தொடர்பான அறிவிப்பு நாளை காலை வெளியிடப்படும் என லிட்ரோ சமையல் எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எரிவாயுவின் விலை சர்வதேச சந்தையில் ஒரு மெட்ரிக் தொன்னுக்கு 85 அமெரிக்க டொலருக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.

இந்த நிலையிலேயே, எரிவாயுவின் விலைகள் திருத்தப்படுகின்றன என்று அவர் தெரிவித்துள்ளார்.

# சேற்றுக்குடாவில முதியோருக்கு வீட்டுத் திட்டம்!





(பழுவூரான்)

மகளிர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் முதியோர் தேசிய செயலகத்தின் நிதி அனுசரணையில் மட்டக்களப்பு மண்முனை வடக்குப் பிரதேச செயலகப் பிரிவின் சேற்றுக்குடாவில் திரிய பியச முதியோருக்கான முதலாவது வீட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் வீடமைப்புக்கான அடிக்கல் நடும் நிகழ்வு மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் வி. வாசுதேவனின் மேற்பார்வையில் மாவட்ட முதியோர் மேம்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் வி. கோகிலனின் எற்பாட்டில் சமூக சேவை உத்தியோகத்தர் பி.ராஜ்மோகன் தலைமையில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

சமூக பாதுகாப்பு கிடைக்க வேண்டிய முதியவர்கள் வாழும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெறுகின்றது.

60 வயதுக்கு மேற்பட்ட மாதாந்த வருமானம் 6 ஆயிரம் ரூபாவுக்குக் குறைவாகப் பெறும் முதியோருக்கே இந்த உதவிகள் வழங்கப்படுகின்றன. வீட்டை நிர்மாணிப்பதற்கு அல்லது திருத்துவதற்கு தேசிய செயலகத்தால் 7 லட்சம் ரூபா வழங்கப்பட்டு வருகிறது.

இந் நிகழ்வில் முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர் திருமதி. நிலக்ஷி நிரூஷன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சட்டவிரோத மண் அகழ்வைத் தடுக்க அம்பாறையில் விசேட நடவடிக்கை



(நவாஸ் அம்பாறை)

சட்டவிரோத மண் அகழ்வைத் தடுக்க அம்பாறையில் விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் ஒரு கட்டமாகச் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் குறிப்பிட்ட இடங்களுக்கு சென்று பார்வையிட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் சட்டவிரோதமான முறையில் அரச காணிகள், களப்புக்கள் மற்றும் விவசாய நிலங்களில் மண் அகழ்தல் மற்றும் மண் நிரப்புதல் சம்பந்தமான விசேட கலந்துரையாடல் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாஉல்லா தலைமையில் அம்பாறை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் கடந்த மாதம் இடம்பெற்றது.

பிரதி பொலிஸ் பரிசோதகர் அஜித் ரோஹன மற்றும் அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம ஆகியோரின் ஏற்பாட்டில் இந்த விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன் போது அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை பகுதியில் குறிப்பாக அரச காணிகள், களப்புக்கள், விவசாய நிலங்கள் ஆகியவற்றில் மண் அகழ்தல் மற்றும் நிரப்புதல் போன்ற நடவடிக்கைகளால் இந்தப் பிரதேசம் வெள்ளம் சூழ்ந்த பிரதேசமாக காணப்படுகிறது என்று பல முறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் வலியுறுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இறுதியாக அனுமதியற்ற முறையில் மண் அகழ்தல் மற்றும் மண் நிரப்பும் விவசாய வயல் காணிகள், அரசுக்குச் சொந்தமான காணிகள் அடையாளம் காணப்பட்டன.

இந்த நிகழ்வில் அம்பாறை பிரதிப் பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜயஸ்ரீ, பொலிஸ் உயரதிகாரிகள், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர்கள், அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர், அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், புவியியல் மற்றும் சுரங்க பணியக அதிகாரிகள், நீர்ப்பாசன அதிகாரிகள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.








# பெஸ்ட் இலவன் வெற்றிக் கிண்ணம்: சாய்ந்தமருது விளாஸ்டர் சம்பியன்!

( நூருல் / ஹுதா உமர் )

கல்முனை பெஸ்ட் இலவன் விளையாட்டு கழகம் ஏற்பாடு செய்த ‘பெஸ்ட் இலவன் ரீ-10 வெற்றிக் கிண்ணம்’ இற்கான போட்டியில் இந்த வருடத்தில் தொடர்ந்து 10 கிண்ணங்களை சுவீகரித்து அசைக்க முடியாத சக்தியாக மிளிர்ந்த சம்மாந்துறை விளையாட்டுக் கழகத்தை சாதாரணமாக வீழ்த்தி சாய்ந்தமருது விளாஸ்டர் விளையாட்டு கழகம் வெற்றி பெற்று பெஸ்ட் இலவன் ரீ-10 வெற்றிக் கிண்ணத்தைத் தட்டிச் சென்றது.

புள்ளிப்பட்டியலில் முதல் இரு இடங்களைப் பெற்ற சம்மாந்துறை விளையாட்டு கழகம் மற்றும் சாய்ந்தமருது விளாஸ்டர் விளையாட்டு கழகம் ஆகிய அணிகள் இறுதிப் போட்டியிக்கு தகுதி பெற்றன.

கல்முனை சந்தாங்கேணி பொது மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சம்மாந்துறை விளையாட்டு கழகம் நிர்ணயித்த 10 ஓவர்கள் முடிவில் 07 விக்கட்டுக்களை மட்டும் இழந்து 65 ஓட்டங்களை பெற்றது.

66 எனும் வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது விளாஸ்டர் விளையாட்டு கழகம் 10 ஓவர்களையும் சந்தித்து 01 விக்கட்டுக்களை மட்டும் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதனடிப்படையில் 09 விக்கட்டுக்கள் வித்தியாசத்தில் எம்.என்.எம். ஜலூத் தலைமையிலான சாய்ந்தமருது விளாஸ்டர் விளையாட்டு கழகம் வெற்றி பெற்றது.

இதில் வெற்றி பெற்ற அணிக்கு 50,000 ரூபாய் பணபரிசும் வெற்றி கிண்ணமும் வழங்கி வைக்கப்பட்டன. இறுதி நாள் போட்டியின் ஆட்ட நாயகனாக சாய்ந்தமருது விளாஸ்டர் விளையாட்டு கழக அதிரடி துடுப்பாட்ட வீரர் முஹம்மட் ஆபாக் தெரிவுசெய்யப்பட்டார்.



# மட்டக்களப்பு தாந்தாமலை முருகன் ஆலய தீர்த்தோற்சவம்!

(பழுவூரான்)

கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க தாந்தாமலை முருகன் ஆலய தீர்த்தோற்சவம் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ பக்தி பூர்வமாக நேற்று புதன் கிழமை இடம்பெற்றது.

# அட்டாளைச்சேனை கோணாவத்தை ஆற்றை புனரமைப்புச் செய்வதற்கு உடன் நடவடிக்கை

(அம்பாறை நவாஸ்)

அட்டாளைச்சேனை கோணாவத்தை ஆற்றைப் புனரமைப்புச் செய்வதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நீர்ப்பாசனத் திணைக்களம் இதற்கான அவசர நடவடிக்கைகளை மேற் கொள்ளவுள்ளது.

அட்டாளைச்சேனை கோணா வத்தை அபிவிருத்தி குழுவின் ஏற்பாட் டில் அட்டாளைச்சேனை பிரதேச செயலா ளர் அஹமட் சாபிர் தலைமையில் பீச் ஹவுஸ் மண்டபத்தில் அட்டாளைச் சேனை கோணாவத்தை அபிவிருத்தி தொடர்பான விஷேட கூட்டம் நடை பெற்றது.

இந்த நிகழ்வின் போது முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் எம். எஸ். உதுமாலெப்பை, அட்டாளைச்சேனை பிரதேச சபையின் விஷேட ஆணை யாளர் எம்ஜஎம். பாயிஸ், அக்கறைப் பற்று நீர்பாசன பொறியலாளர், அட் டாளைச்சேனை பொது சுகாதார வைத் திய அதிகாரி, அட்டாளைச்சேனை கோணாவத்தை அபிவிருத்தி குழுவின் உறுப்பினர்கள், அட்டாளைச்சேனை நீர்ப்பாசன குழுவினர், விவசாய உறுப் பினர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது. கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்க வருமாறு–

அட்டாளைச்சேனை கோணா வத்தை ஆற்றின் எல்லையிடும் பணி கள் ஏற்கனவே முதல்கட்டமாக பெரிய பாலத்தடியில் இருந்து தைக்கா நகர் வரை எல்லை இடப்பட்டது. இரண்டாவது கட்டமாக அட்டாளைச்சேனை மீனோ டைக்கட்டில் இருந்து கொட்டுப்பாலம் வரைக்கும் எல்லை இடப்பட்டது. எல்லை யிடைப்படாமல் நிறுத்தப்பட்ட கொட்டு பாலத்தில் இருந்து பெரிய பாலத்தடி வரை ஆற்றின் இரு கரையிலும் உள்ள காணி சொந்தக்காரர்களை அழைத்து எல்லையிடுவதற்கான பணிகளை அக்கறைப்பற்று நீர்பாசன திணைக் களம் மேற்கொள்ளுதல்.

கோணாவத்தை ஆற்றில் சல் மினியா நிரம்பியுள்ளதால் வடிச்சல் நீர் ஓடுவதற்கு தடையாகவுள்ளது. முதலைகளால் இந்தப் பிரதேச மக்கள் பாதிப்புக்குள்ளாகின்றனர் . இதனை துப்பரவு செய்வதற்கு அக்கறைப்பற்று நீர்பாசன திணைக்களம் அவசர நடவ டிக்கை மேற்கொள்ளல்.

இந்த நிகழ்வை அடுத்து அட்டா ளைச்சேனை கோணாவத்தை ஆற்றில் நீரோடுவதற்கு தடையாக நிரம்பி யுள்ள சல்மினியான் நிரம்பியுள்ள பகுதியையும், அட்டாளைச்சேனை கோணாவத்தையில் புதிதாக அமைக் கப்பட்டு வரும்புதிய பால அமைப்பு பணிகளை பார்வையிட்டதோடு அட் டாளைச்சேனை மீனோடைக்கட்டு பகுதியில் வடிச்சல் ஓடுவதற்கு தடை யாக உள்ள பகுதியையும் பார்வை யிட்டனர்.



# படுகொலைகளுக்கு நீதி வழங்காது இருப்பது அரசுக்கு வெள்ளையடிக்கும் அணுகுமுறையே!

## நிலக்ஸனின் நினைவேந்தலில் நிரோஷ் தெரிவிப்பு

தமிழ் மக்கள் மீதான ஒடுக்கு முறைகளைகளைக் கண்டு கொள்ளாது இருப்பதும் படுகொலைகள் தொடர்பில் நீதி வழங்காது இருப்பதும் போர் மற்றும் போரின் பின்பான பாரதூரமான மனித உரிமை மீறல்களை மறைப்புச் செய்து அரசுக்கு வெள்ளையடிப்பதற்கான அணுகுமுறைகளே.

இவ்வாறு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாக ராஜா நிரோஷ் தெரிவித்ததார்.

சாளரம் பத்திரிகையின் ஆசிரியரும் முன்னாள் தமிழ் மாணவர் ஒன்றியத்தின் தலைவருமான சகாதேவன் நிலக்சனின் 16 ஆவது நினைவேந்தல் யாழ்ப்பாண ஊடக அமையத்தில் செவ்வாய்க்கிழமை சிரேஷ்ட ஊடகவியலாளர் இ.தயாபரன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் பொது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

தமிழ் மக்கள் மீதான ஒடுக்கு முறைகளையும் அவர்களது அரசியல் அபிலாசைகளையும் உண்மைகளையும் வெளியுலகுக்குக் கொண்டு சென்றதன் காரணமாகவே தமிழ் ஊடகவியலாளர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டனர். இந்தப் படுகொலைகளுக்கு அரசு முழுப்பொறுப்புடையது. அதனால் தான் எந்தப் படுகொலைகளுக்கும் நீதி



வழங்கப்படவில்லை.

சாகதேவன் நிலக்சன் படுகொலை செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் ஏராளமான பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள் வீதிகளில் சுட்டுக்கொல்லப் பட்டனர். அவர்கள் யாரும் ஆயுதப் போராட்டத்தில் தொடர்புபட்டவர்கள் அல்ல. ஜனநாயக வழியில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக் காகவும் உரிமைகளுக்காகவும் மனித உரிமை மீறல்களுக்காகவும் துணிந்து செயற்பட்டவர்கள்.

இவ்வாறாக படுகொலைச் சம்பவங் கள் முழுமையான அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் கடுமையான இராணுவ பிர சன்னமுள்ள பகுதிகளிலேயே இடம் பெற்றன.

இவ்வாறாக நடைபெற்ற படுகொலை களின் உண்மையும் ஆரயப்பட வில்லை. குற்றவாளிகள் தண்டிக்கப் படவும் இல்லை. அரசு பொறுப்புச் சொல்ல வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ளவும் இல்லை. தமிழ் மக்கள் மீது பிரயோகிக்கப் பட்ட மிலேச்சத்தனமான மனித உரிமை மீறல்களைக் கூட பரிகாரங்கள் ஏற்படுத் தாது சகித்துக்கொள்ளுங்கள் எனக் கூறி வேடிக்கையான நல்லிணக்கம் பற்றிக் கூறப்படுகின்றது.

இதில் ஊடகவியலாளர்கள், அரச சார்பற்ற பணியாளர்கள், மனித உரிமை களுக்காக செயற்பட்டவர்கள், மாண வர் சங்க செயற்பாட்டாளர்கள் என திறமை யான இளைய தலைமுறையை நாம் இழந்துள்ளோம். இவர்கள் விடயத் தில் இன்றும் நீதிக்காக ஏங்குகின் றோம். நடைபெற்ற அநியாயங்களுக்கு பொறுப்புக்கூறல் இன்றி இரண்டு மூன்று தசாப்தங்கள் கடந்துவிட்டன.

இந்தக் காலப் பகுதியில் நியாயத் துக்காகப் போராடும் தாய்மாரும் உறவி னரும் உடல் உள தாக்கங்கள் மற்றும் வயது முதுமை காரணமாக இறந்து போகின்றனர். இவ்வாறே மகனுக்கான நீதிக்காக ஏங்கியவாறே நிலக்சனின் தாயும் திடீர் என்று மரணமடைந்து விட்டார்.

இவ்வாறு பொறுப்புக் கூறாது இருப் பது, நடைபெற்ற படுகொலைகளை மறைப்பதற்கும் போர் மற்றும் போரின் பின்பான பாரதூரமான மனித உரிமை மீறல்களை மறைப்புச் செய்து அரசை வெள்ளையடிப்பதற்கான அணுகுமுறை களே ஆகும். –என்றார்.







# குவைத்தில் போதைப்பொருள் குற்றச்சாட்டு: தூக்கிலிடப்பட்ட நபருக்கு 3 மனைவிகள்!

குவைத்தில் போதைப்பொருள் குற்றச்சாட்டில் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டு தூக்கிலிடப்பட்ட இலங்கையர் ஒருவரின் மரண விசாரணை நேற்று நீர்கொழும்பு மாநகர சபை மற்றும் நீர்கொழும்பு வைத்திய சாலையின் மரண விசாரணை அதிகாரி சிறி ஜயந்த விக்கிரமரத்ன முன்னிலையில் இடம்பெற்றது.

எனினும் உயிரிழந்தவரின் மனைவிகள் என கூறி மூன்று பெண்கள் முன்னிலையாகியதால் விசாரணை இன்று வரை ஒத்திவைக்கப்பட்டது.

அநுராதபுரம், கல்கடவல, சூர இசுருகம பகுதியைச் சேர்ந்த வீரசிங்க ஆராச்சிலாகே ஜுட் ரவீந்திர பெரேரா என்ற 46 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் மனைவி எனக் கூறப்படும் குறித்த முகவரியில் வசிக்கும் எஸ்.திஸாநாயக்க முதியன்சேலாகே என்பவர் சாட்சியமளித்துள்ளார்.

## குழப்பத்தில் நீதித்துறை



“உயிரிழந்தவர் நான் திருமணம் செய்துக் கொண்ட எனது கணவராவார். எங்களுக்குத் திருமணமாகி 17 வருடங்கள் ஆகின்றன. நான் ஓமானில் வேலை செய்கிறேன். கடற்படையில் சிப்பாயாக பணியாற்றி வந்த அவர், பின்னர் வெளிநாட்டுக்கு வேலைக்குச் சென்றார்.

தனது தந்தை குவைத்தில் தூக்கிலிடப்பட்டதை யூடியூப்பில் பார்த்ததாக எனது மகன் என்னிடம் தெரிவித்தார். எனக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர். இதை அறிந்தவுடன் இலங்கை வந்தேன்.

அவரது உடல் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அவர் போதைப் பொருள் குற்றச்சாட்டில் தண்டனை பெற்று தூக்கிலிடப்பட்டார் என்பதை அறிந்தேன். இறந்த எனது கணவருக்கு வேறு இரண்டு பெண்களுடன் திருமணம் நடந்தது பின்னரே தெரிய வந்தது.

நான் கணவனின் உடலை ஏற்க விரும்பவில்லை. ஆனால், இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள எனக்கு வாய்ப்பு தருமாறு கேட்டுக் கொள்கிறேன்” என அந்த பெண் குறிப்பிட்டுள்ளார்.

இறந்தவரின் சகோதரர் ஒருவர் சாட்சியம் அளித்ததுடன், சடலத்தை ஏற்றுக்கொள்ள தாய் விரும்பவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

இறந்தவரின் மனைவிகள் என்று கூறப்படும் ஏனைய பெண்களின் அடையாளத்தைச் சரிபார்த்து, அவர்களை பிள்ளைகளின் தகவல், திருமண சான்றிதழ் மற்றும் பிறப்பு சான்றிதழ்களுடன் இன்று பரிசோதனைக்கு முன்னிலைப்படுத்துமாறு மரண விசாரணை அதிகாரி சிறி ஜயந்த விக்கிரமரத்ன கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்தார்.

# கல்முனையில் ஐ.தே.க. கூட்டம்

## செயலாளர் ரங்கே பண்டார பங்கேற்கிறார்



(ஏ.எஸ்.மௌலானா)

ஐக்கிய தேசிய கட்சியின் கல்முனைத் தொகுதி செயற்பாட்டாளர்கள் சந்திப்பும் மத்திய குழு புனரமைப்புக் கூட்டமும் எதிர்வரும் 6 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் கல்முனை அல்பஹ்றியா மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பாலித ரங்கே பண்டார பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது நீண்ட காலமாக செயலிழந்து போயுள்ள கட்சியின் கல்முனை தொகுதிக்கான மத்திய குழுவுக்கு நிர்வாகிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர். அத்துடன் அதிகார சபையொன்றும் அமைக்கப்படவுள்ளது.

கட்சியின் பழைய அங்கத்தவர்களை ஒன்றிணைத்தல், புதிய அங்கத்தவர்களை சேர்த்தல், கட்சிக்கான ஆதரவுத் தளத்தை கட்டியெழுப்புதல் போன்ற விடயங்களை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கான செயற்றிட்டங்களும் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

# காரைதீவில் நல்லிணக்க சிரமதானம்





(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு பிரதேச நல்லிணக்க குழுவும், காரைதீவு பிரதேச செயலகமும் இணைந்து எல்லை வீதியில் தமிழ் முஸ்லிம் மக்களிடையே முரண்பாட்டைத் தவிர்க்கும் முகமாக சமூக நல்லிணக்க சிரமதானம் ஒன்றை மேற்கொண்டது.

இந்தச் சிரமதானம் மாளிகைக்காடு காரைதீவு எல்லை வீதியான சித்தானைக்குட்டி ஆலயத்துக்குச் செல்லும் வீதியில் அமைந்துள்ள கரைச்சைப்பாலப் பகுதியில் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜன் தலைமையில் நடைபெற்றது.

சிரமதான நிகழ்வில், காரைதீவு உதவி பிரதேச செயலாளர் எஸ்.பாத்தீபன், காரைதீவு பிரதேச சபையின் செயலாளர் அ. சுந்தரகுமார், சமாதானமும் சமூக பணியும் நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் ரி.ராஜேந்திரன், கள இணைப்பாளர் பி.ரோஹறிணி, காரைதீவு பிரதேச நல்லிணக்க குழு இணைப்பாளர் எம். ஐ. றியால், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், நல்லிணக்கம் குழு அங்கத்தவர்கள் உட்பட கிராம தமிழ், முஸ்லிம் மக்களும் கலந்து கொண்டார்கள்.

இந்தச் சிரமதான நிகழ்வை அடுத்து மாளிகைக்காடு, காரைதீவு எல்லை பிரதேசங்களில் போடப்படும் திண்மக் கழிவுகளால் ஏற்படும் முரண்பாடுகளை தடுக்கும் நோக்குடன் விழிப்புணர்வு பதாதை ஒன்றும் போடப்பட்டுள்ளது.

### சுதந்திர தின விழா கொண்டாட்டம்:

# சென்னை விமான நிலையத்தில் ஐந்து அடுக்குப் பாதுகாப்பு!



இந்தியாவின் சுதந்திர தினவிழா கொண்டாட்டத்தை முன்னிட்டு சென்னை விமான நிலையத்தில் 5 அடுக்கு பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.

இந்தியாவின் 77 ஆவது சுதந்திர தின விழா எதிர்வரும் 15 ஆம் திகதி நாடு முழுவதும் கோலாகலமாகக் கொண்டாடப்படவுள்ளது.

சுதந்திர தின விழா கொண்டாட்டத்தை சீர்குலைக்க தீவிரவாதிகள் சதித்திட்டம் தீட்டுவதாக உளவுத் துறைக்குத் தகவல் கிடைத்துள்ளதால், நாடு முழுவதும் உள்ள விமான நிலையங்கள், வழிபாட்டுத் தளங்கள், மக்கள் அதிகமாக கூடும் முக்கியமான தொடருந்து மற்றும் பேருந்து நிலையங்களில் பாதுகாப்பு அதிகரக்கப்பட்டுள்ளது.

சென்னை விமான நிலையத்தில் 5 அடுக்கு பாதுகாப்பு முறை நடைமுறைக்கு வந்துள்ளது.

சென்னை விமான நிலையத்துக்கு வரும் வாகனங்களை பிரதான நுழைவு பகுதியிலேயே நிறுத்தி மோப்பநாய் உதவியுடன் சோதனை செய்யப்படுகிறது. வெடிகுண்டு நிபுணர்கள் சோதனை செய்கின்றனர்.

விமான நிலைய வளாகத்தில் துப்பாக்கி ஏந்திய பொலிஸா ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். வாகனத் தரிப்பிட பகுதிக்குள் நீண்ட நேரமாக நிற்கும் கார்களை வெடிகுண்டு நிபுணர்கள் தீவிரமாகச் சோதனையிட்டு விசாரிக்கின்றனர்.

விமானங்களுக்கு எரிபொருள் நிரப்பும் பகுதியில், கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அப்பகுதியில் ஏற்கெனவே உள்ள சி.சி.டி.வி. கருவிகளுடன் தற்போது கூடுதலாக சி.சி.டி.வி. கருவிகள் பொருத்தி , விமான நிலைய பாதுகாப்பு கட்டுப்பாட்டு அறையிலிருந்து 24 மணி நேரமும் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது.

அதேபோல் விமானப் பயணிகளுக்கும் பாதுகாப்பு சோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதனால், உள்நாட்டு பயணிகள் விமானம் புறப்படும் நேரத்துக்கு ஒன்றரை மணி நேரம் முன்னதாகவும், சர்வதேச பயணிகள் மூன்றரை மணி நேரத்துக்கு முன்பாகவும் வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், சென்னை விமான நிலையம் முழுவதும் பாதுகாப்பு வலயத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. எதிர்வரும் 20 ஆம் திகதி நள்ளிரவு வரை இந்தப் பாதுகாப்பு விதிமுறைகள் அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# மக்களவைத் தேர்தலில் நான் போட்டியில்லை!

**- அண்ணாமலை அறிவிப்பு**



எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை என பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

'என் மண், என் மக்கள்' எனும் பெயரில் பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை நடை பயணம் மேற் கொண்டுள்ளார். அவர் நேற்று, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம், அறந்தாங்கி ஆகிய சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கு உட்பட்ட பகுதிகளில் நடை பயணம் மேற்கொண்டு மக்களைச் சந்தித்தார்.

இதில், திருமயம் பேருந்து நிலையம் அருகில் மக்கள் மத்தியில் அவர் கருத்து தெரிவித்தார். இதன்போது அண்ணாமலை மேலும் தெரிவிக்கையில், தமிழகத்தில் தி.மு.க. ஆட்சிக்கு வருவதற்கு முன்பு மாநில அரசு 5.50 லட்சம் கோடி ரூபா கடன் வாங்கியிருந்தது. இப்போது தி.மு.க. ஆட்சிக்கு வந்து 27 மாதங்கள் ஆன நிலையில் 7.53 லட்சம் ரூபா கோடி கடன் வாங்கியிருக்கிறார்கள். அப்படியானால், இங்குள்ள ஒவ்வொரு குடும்ப அட்டைதாரரர்கள் மீதும் 3.52 லட்சம் ரூபா கடன் சுமத்தப்பட்டிருக்கிறது. இதுதான் திராவிட மாடல்.

அடுத்த மக்களவைத் தேர்தலிலும் பா.ஜ.க. வெற்றி பெற்று மீண்டும் மோடிதான் பிரதமராகப் போகிறார். அப்போது இங்கிருந்து பாஜக சட்டமன்ற உறுப்பினர்கள் செல்ல வேண்டும். அதற்காகத்தான் இந்த பாத யாத்திரை என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன், லெணாவிலக்கு பகுதியிலுள்ள சிற்பக் கூடத்தைப் பார்வையிட்ட அண்ணாமலை, செய்தியாளர்களிடம், அ.தி.மு.கவுடனான கூட்டணி குறித்து தேசியத் தலைமைதான் முடிவெடுக்கும். மக்களவைத் தேர்தலில் நான் போட்டியிட போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

# மக்கள் நீதி மய்யம் ஆர்ப்பாட்டம்!



மணிப்பூர் வன்முறை சம்பவத்தைக் கண்டித்து மக்கள் நீதி மய்யம் கட்சி சார்பில் எதிர்வரும் 6 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இதுதொடர்பாக கட்சியின் பொதுச் செயலாளர் ஆ.அருணாச்சலம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

மணிப்பூர் இனக்கலவரம், வன்முறை, பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகளைத் தடுக்கத் தவறிய மத்திய அரசைக் கண்டித்தும், சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ள மணிப்பூர் மாநில அரசைக் கலைத்திட வலியுறுத்தியும் மக்கள் நீதி மய்யம் சார்பில், எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 10 மணியளவில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.



# பிரேசிலில் பொலிஸார் சோதனை நடவடிக்கை!

## 45 பேர் கொலை

பிரேசிலின் மூன்று மாநிலங்களில் போதைப்பொருள் குழுவை இலக்கு வைத்து முன்னெடுக்கப்பட்டு வரும் பொலிஸாரின் சோதனை நடவடிக்கையில் இதுவரை 45 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

போதைப் பொருள் கடத்தல்காரர்களை கைது செய்வதற்காக தொடர்ந்தும் தேடுதல் பணிகள் இடம்பெற்றுவரும் நிலையில், இருதரப்பினருக்கும் இடையில் அங்கு பரஸ்பர துப்பாக்கி பிரயோக சம்பவங்கள் பதிவாவதாக சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரி யோ டி ஜெனிரோ பகுதியில் இடம் பெற்ற சமீபத்திய தாக்குதலில் சுமார் 10 பேர் உயிரிழந்துள்ளனர் என்று குறிப்பிடப்படுகின்றது.

அவர்களில் பெரும்பாலனவர்கள் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுபவர்கள் என அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஒப்பரேஸன் சீல்ட் என அழைக்கப்படும் இந்த சுற்றிவளைப்பில், சாவோ பாலோ மாநிலத்தில், 16 பேரும், பாஹியாவில் 19 பேரும் இதுவரை கொல்லப்பட்டுள்ளனர்.

அத்துடன், 58 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதுடன், சோதனையில் ஈடுபட்டு வரும் பொலிஸாரும் காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் குறிப்பிடுகின்றன.

# காதல் பரிசு!



அமெரிக்காவின் கன்சாஸ் மாநிலத்தைச் சேர்ந்த லீ வில்சன் என்ற விவசாயி தனது 50 வருட திருமண பூர்த்தியை முன்னிட்டு மனைவிக்காக சூரியகாந்தி பூந்தோட்டமொன்றை பரிசளித்துள்ளார்.

குறித்த விவசாயி தமது 50ஆவது ஆண்டு திருமண நாளை முன்னிட்டு மனைவிக்காக சுமார் 80 ஏக்கர் நிலப்பரப்பில் 1.2 மில்லியன் சூரியகாந்தி செடிகளை நாட்டியிருந்தார் என உள்ளூர் ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

அவர் தனது மகனின் உதவியுடன் இரகசியமாக பூச்செடிகளை வளர்த்துள்ளார்.

இது மிகவும் சிறப்பாக உணர வைத்ததாக விவசாயியின் மனைவி தனது மகிழ்ச்சியை பகிர்ந்துள்ளார்.



# முடிவுக்கு வரும் திருமண வாழ்வு!

கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோவின் திருமண வாழ்வு முடிவுக்கு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமர் மற்றும் அவரது மனைவி ஸோபெய் கிரகரி ட்ரூடோ பிரிந்து வாழத் தீர்மானித்துள்ளனர்.

18 ஆண்டு திருமண வாழ்வின் பின்னர் அர்த்தபூர்வமானதும், கடினமானதுமான உரையாடல்களின் பின்னர் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளோம் என அவர் தெரிவித்துள்ளனர்.


ஒருவர் மீது ஒருவருக்கு பரஸ்பர மரியாதை காணப்படுவதாகவும், ஆழமான அன்பு தொடர்வதாகவும்,பிள்ளைகளின் நலனைக் கருத்தில்கொண்டு தங்களது அந்தரங்க உரிமையை மதிக்குமாறு ட்ரூடோ தம்பதியினர் கோரியுள்ளனர்.

விவாகரத்துக்கான ஆவணங்களில் ட்ரூடோ தம்பதியினர் கையொப்பிட் டுள்ளனர் என பிரதமர் அலுவலகம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

முன்னாள் பிரதமர் பியே ட்ரூடோவின் புதல்வரான ஜஸ்ரின் ட்ரூடோ தொலைக் காட்சி பிரபலமான ஸோபெய் கடந்த 2005 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆம் திகதி கரம் பிடித்திருந்தார்.

கனடாவில் பதவியில் இருக்கும் போதே விவகாரத்தை அறிவித்த இரண்டாவது பிரதமராக ஜஸ்ரின் ட்ரூடோ கருதப்படுகின்றார்.

இதற்கு முன்னர் டரூடோவின் தந்தை பியே ட்ரூடோவும் பதவி வகித்த காலத்திலேயே விவகாரத்தை அறிவித்தார். விவகாரததுக்கான காரணங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.


கசூரினா
படகுச் சேவை
சேவைகள்
01. மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பார்த்தல்
02. பவளப் பாறைகள் சுற்றிப் பார்த்தல்
03. வெளிச்சவீட்டு கடற்பகுதியைச் சுற்றிப் பார்த்தல்
04. பருத்தித்தீவு சென்று வருதல்
05. நயினாதீவு சென்று வருதல்
06. காரைநகர் கடற்கோட்டையைச் சுற்றிப் பார்த்தல்
காரைநகர் கசூரினா கடலில் கண்ணாடி இழைப்படகில் பயணித்தவாறே கடலின் அடியில் பவளப்பாறைகள் மற்றும் மீன் இனங்களை கண்டு ரசிக்கக் கூடிய விதத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகுகள் இன்னும் சில வாரங்களில் எம்மால் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.
கசூரினா படகுச்சேவை தொடர்புகளுக்கு : 077 078 3949